**கனம் சார்பு நீதிமன்றம், மானாமதுரை**
**முன்னிலை: திரு. எம். சண்முக கனி, பி.ஏ., எல்.எல்.பி.,**
**சார்பு நீதிபதி, மானாமதுரை**
**2025ம் வருடம் அக்டோபர் மாதம் 06ம் நாள் திங்கட்கிழமை**
**இடைக்கால மனு எண்.4/2025**
**இன்**
**அசல் வழக்கு எண்.43/2024**

1. செல்வராஜ்
2. நித்யா ..மனுதாரர்கள்/
பிரதிவாதிகள்

..எதிர்..

நாகராணி ...எதிர்மனுதாரர்/வாதி

இந்த மனுவானது இறுதி விசாரணைக்காக 20.09.2025–ம் தேதி இந்நீதிமன்றத்தின் முன்னர் வந்த போது, மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.R.சுரேஷ்பாபு அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.M. கணேசன் அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்கள் கேட்டறிந்து, வழக்காவணங்களை பரிசீலனை செய்தும், இது நாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கலான

**உத்திரவு**

இம்மனுவானது, மனுதாரர்கள் தரப்பில் கூடுதல் எதிர்வழக்குரை தாக்கல் செய்ய அனுமதித்து வழக்கினை மேல்நடத்திட உத்தரவிட வேண்டி உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 8 விதி 9 கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) **மனுவின் சுருக்கம்:**

அசல் வழக்கு வா.சா.1 குறுக்கு விசாரணைக்காக வாய்தா ஏற்பட்டுள்ளது என்றும் இந்த மனுதாரர்கள் அசல் வழக்கில் 19.07.2023 அன்று தாக்கல் செய்த எதிர்வழக்குரையில் கூறத்தவறிய விபரங்களையும் 19.07.2023 தேதிக்கு பிறகு மனுதாரர்களுக்கு கிடைக்கப்பெற்ற ஆவணங்கள் மூலம் பெற்ற விபரங்களையும் நீதிமன்றத்திற்கு தெரியப்படுத்த கூடுதல் எதிர்வழக்குரை தாக்கல் செய்தால் தான் மனுதாரர்கள் தரப்பு வழக்கை நிரூபிக்க இயலும் என்றும் இந்த மனுவை அனுமதிப்பதால் எதிர்மனுதாரர்களுக்கு எவ்வித இழப்பும் ஏற்படப்போவதில்லை என்றும் எனவே இந்த மனுவினை அனுமதித்து உத்திரவிட வேண்டியது அவசியமாக உள்ளது என்றும் கூறப்பட்டுள்ளது.

3) **எதிர்மனுதார் தரப்பு எதிருரையின் சுருக்கம்:**

மனுவில் சொல்லியுள்ள விபரங்கள் உண்மைக்கு புறம்பானவை என்றும் தற்சமயம் கூடுதல் ஆவணங்கள் கிடைக்கப்பெற்றதாக மனுவில் கூறியுள்ள நிலையில் அந்த ஆவணங்களின் பட்டியலை கூற மறுத்திருப்பதன் மூலம் தாவா வழக்கை காலதாமதப்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தோடு மனுதாரர்கள் செயல்படுவது தெளிவாகிறது என்றும் இந்த மனுவினை அனுமதிப்பதால் மனுதாரர்களுக்கு எவ்வித பயனும் இல்லை என்றும் இந்த மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது.

**4)** இரு தரப்பும் பரிசீலிக்கப்பட்டது. மனுதாரர்கள் தரப்பில் அசல் வழக்கு வா.சா.1 குறுக்கு விசாரணைக்காக வாய்தா ஏற்பட்டுள்ளது என்றும் இந்த மனுதாரர்கள் அசல் வழக்கில் 19.07.2023 அன்று தாக்கல்

செய்த எதிர்வழக்குரையில் கூறத்தவறிய விபரங்களையும் 19.07.2023 தேதிக்கு பிறகு மனுதாரர்களுக்கு கிடைக்கப்பெற்ற ஆவணங்கள் மூலம் பெற்ற விபரங்களையும் நீதிமன்றத்திற்கு தெரியப்படுத்த கூடுதல் எதிர்வழக்குரை தாக்கல் செய்தால் தான் மனுதாரர்கள் தரப்பு வழக்கை நிரூபிக்க இயலும் என்றும் இந்த மனுவை அனுமதிப்பதால் எதிர்மனுதாரர்களுக்கு எவ்வித இழப்பும் ஏற்படப்போவதில்லை என்றும் கூறப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர் தரப்பில் தற்சமயம் கூடுதல் ஆவணங்கள் கிடைக்கப்பெற்றதாக மனுவில் கூறியுள்ள நிலையில் அந்த ஆவணங்களின் பட்டியலை கூற மறுத்திருப்பதன் மூலம் தாவா வழக்கை காலதாமதப்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தோடு மனுதாரர்கள் செயல்படுவது தெளிவாகிறது என்றும் இந்த மனுவினை அனுமதிப்பதால் மனுதாரர்களுக்கு எவ்வித பயனும் இல்லை என்றும் கூறப்பட்டுள்ளது. மேற்கண்டவாறு இரு தரப்பிலும் கூறப்பட்டுள்ளதன் அடிப்படையில் இந்த மனுவினை பரிசீலனை செய்து பார்க்கின்ற போது மனுதாரர்கள் தரப்பில் இந்த மனுதாரர்கள் அசல் வழக்கில் 19.07.2023 அன்று தாக்கல் செய்த எதிர்வழக்குரையில் கூறத்தவறிய விபரங்களையும் 19.07.2023 தேதிக்கு பிறகு மனுதாரர்களுக்கு கிடைக்கப்பெற்ற ஆவணங்கள் மூலம் பெற்ற விபரங்களையும் நீதிமன்றத்திற்கு தெரியப்படுத்த கூடுதல் எதிர்வழக்குரை தாக்கல் செய்தால் தான் மனுதாரர்கள் தரப்பு வழக்கை நிரூபிக்க இயலும் என்றும் கூறப்பட்டுள்ளதை கருத்தில் கொண்டு பார்கின்ற போது மனுதார்களுக்கு வாய்பளிக்கும் விதமாகவும் அசல் வழக்கில் உரிய தீர்வு காண்பதற்கு ஏதுவாகவும் வழக்கு நடவடிக்கைகளின் எண்ணிக்கை பெருக்கத்தை தடுக்கும் விதமாகவும் இந்த மனுவினை அனுமதித்து உத்திரவிடுவது தான் நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

முடிவாக இம்மனு அனுமதித்து உத்திரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இந்த உத்திரவானது என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு என் முன்னிலையில் கணினியில் அடிக்கப்பட்டு பின் என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு 2025ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 06ம் நாளான இன்று என்னால் இந்த உத்திரவு அவையறிய பகரப்பட்டது.

**ஓம்.எம்.சண்முக கனி,**
சார்பு நீதிபதி,
மானாமதுரை.

மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள்: இல்லை

எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள்: இல்லை

**ஓம்.எம்.சண்முக கனி,**
சார்பு நீதிபதி,
மானாமதுரை.